# அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2018

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | |

நேரம்: 2.30 மணி **தமிழ் இரண்டாம் தாள்** மதிப்பெண்கள்: 100

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

அறிவுரைகள் :

1. அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
iii) வினா எண் 38க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

### பிரிவு - I (மதிப்பெண்கள் : 20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: *பகுதி - I*

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1. முதலெழுத்துக்கள் ..................... ஆகும்.
   அ) 18 ஆ) 246 இ) 30
2. பண்பினை மட்டும் உணர்த்தி நின்ற பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது ............ எனப்படும்.
   அ) பெயர்ச்சொல் ஆ) தெரிநிலைப் பெயரெச்சம் இ) குறிப்புப் பெயரெச்சம்
3. விரியுவமை ............ எனவும் வழங்கப்படும்.
   அ) உவமைத் தொடர் ஆ) உருவகத் தொடர் இ) உவமேயம்
4. அகத்திணைக்கும், புறத்திணைக்கும் பொதுவாக வரும் திணைகள் ..........
   அ) கைக்கிளை, பெருந்திணை ஆ) குறிஞ்சி, வெட்சி இ) பாடாண்திணை
5. வெண்பா ........... வகைப்படும்.
   அ) எட்டு ஆ) நான்கு இ) ஆறு

*பகுதி - 2*

**கோடிட்ட இடத்தை நிரப்புக:** 5×1=5

6. இனங்குறித்தலுக்கு ஒரு சான்று ...............
7. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை உள்ள சிறுபொழுது ........... ஆகும்.
8. அகப்பொருள் வாழ்வியல் எனில், புறப்பொருள் ........... ஆகும்.
9. ஐந்தடி முதல் பன்னிரெண்டு அடிவரை பெற்று வருவது .......... ஆகும்.
10. செய்யுளில் ஒரு சொல் பிரிவுபடாமல் நின்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருவது ........ எனப்படும்.

*பகுதி - 3*

**சுருக்கமான விடையளிக்கவும்:** 10×1=10

11. உம்மைத் தொகையில் வரும் வல்லினம் மிகாது சான்று தருக.
12. *விரித்தெழுதுக :* நான்மறை
13. *கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக:*
    பொங்க வெக்க வெங்கலப் பாத்திரம் வாங்கினேன்.

14. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக: பஜாரில் ரெடிமேட் டிரஸ் வாங்கினேன்.
15. மரபுப் பிழை நீக்கி எழுதுக : வண்டு ரீங்காரமிட கோழி கூவியது.
16. கீழ்க்காணும் தொடரினை சந்திப் பிழையின்றி எழுதுக:
மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது
17. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக:
பாரதியார் வள்ளலாரைப் புதுநெறி கண்ட புலவர் என்று போற்றினார்
18. மரபுத் தொடருக்கு ஏற்ற பொருளைத் தருக: கயிறு திரித்தல்
19. இலக்கணக் குறிப்பு தருக : உறுவேனில்
20. இருபொருள் தருக : படி

## பிரிவு - II (மதிப்பெண்கள் : 10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்கவும்:** 5×2=10

21. பொதுமொழி என்றால் என்ன? சான்று தருக.
22. ஒன்றொழிப் பொதுசொல் என்றால் என்ன?
23. நேர்விடை, சுட்டு விடையை விளக்குக.
24. முல்லை திணைக்குரிய முதற்பொருளை எழுதுக.
25. பாடாண் திணையை விளக்குக.
26. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
27. முதலெழுத்து, சார்பெழுத்து என்றால் என்ன?

## பிரிவு - III (மதிப்பெண்கள் : 50) *பகுதி - 1* 2×5=10

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை யளிக்கவும்:**

28. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
29. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு
துப்பாய தூஉம் மழை. - இதில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.(அல்லது)
தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.
30. ***கீழ்க்காணும் குறட்பாவினைஅலகிட்டு வாய்ப்பாடு தருக:***
மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

### *பகுதி - 2*

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்கவும்:** 2×5=10

31. "புகை நமக்கு பகை" என்னும் கருத்தை விளக்கும் துணைப்பாட கட்டுரையை விளக்குக.
32. அகழாய்வு குறித்து செய்திகளைத் தொகுத்து எழுதுக.
33. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துக்களைச் சுருக்கி எழுதுக.

### *பகுதி - 3*

34. *அ)* கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க : 3+2=5

மாலதி ஸ்கூல் லைப்ரரியனிடம் இங்கிலீஷ் டிக்ஷனரி, அட்லஸ், சயின்ஸ் மேகசீன் எந்த ராக்கில் இருக்கிறது என வினவினாள்.

*ஆ) அரபு எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக:*

i) ஆய கலைகள் மொத்தம் .......... ஆகும்.
ii) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ............
iii) இந்த ஆங்கில ஆண்டு ............ ஆகும்.
iv) பத்துப்பாட்டு ............ நூல்களைக் கொண்டது.

35. அ) கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க :3+2 = 5

This is the age of Computers. Computers are becoming more and more a part of everyday life. Today in the running of business, firm, industrials concerns and government departments lot of information processing is required. The Computer is the superfast information processing unit.

ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டடிற்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக:

i) Take time by the forelock. ii) Make hay while the sun shines?
iii) East or West, home is the best. iv) Work is worship.

35. *குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா:* 5×1=5

உலகிலேயே மிகவும் அற்புதமான, நம்பமுடியாத சாதனை செய்வபர்கள் யார்? எப்போதும் நம்பிக்கை குறையாமல் வாழ்கிறவர்கள் எவரோ, அவர்கள் தாம் மாற்றுத்திறனாளிகளிடம் இத்தகைய நம்பிக்கையை அதிகமாகவே காணலாம்.

வின்செண்ட் வான்கோக் என்பவர் காது கேட்புத் திறனற்ற மாற்றுத் திறனாளி அவர் ஓவியம் வரைவதில் சிறந்து விளங்கினார். ஆனால் அவரை உதவியாளராகச் சேர்த்துக் கொள்ள மற்ற ஓவியர்கள் மறுத்து விட்டனர். அதற்காக அவர் மனம் வருந்தவில்லை. தாமே தூரிகை எடுத்து வரையத் தொடங்கினார். வாழ்வில் ஏற்றம் பெற்று மிகச் சிறந்த ஓவியர் என்ற பெயரும் பெற்று விட்டார்.

ஓவியர் பிக்காசோவின் ஓவியம் போல் இவருடைய ஓவியங்களும் சிறப்பாகப் பேசப்படுகின்றன. நம்பிக்கைதான் வாழ்வின் உயிர்நாடி. நம்பிக்கை இருந்தால் நம் விதியைக் கூட மாற்றிச் சாதனை படைக்கலாம் என்பதற்கு இவர்கள் வாழ்க்கை மிகச் சிறந்த சான்று.

i) சாதனை செய்பவர்கள் யார்?
ii) நம்பிக்கை யாரிடம் அதிகமாக உள்ளது?
iii) வின்செண்ட் வான்கோக் எதில் சிறந்து விளங்கினார்?
iv) வின்செண்ட் வான்கோக்கின் ஓவியம் யாருடைய ஓவியத்துடன் ஒப்பு நோக்கப்படுகிறது?
v) வாழ்வின் உயிர்நாடி எது?

## பகுதி - 4

36. **கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றினுக்கு விடையளிக்கவும்: 1×5=5**

**அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக:**

ஓர் ஊரில் மக்கள் சோம்பலாக இருப்பதைப் பார்த்த மன்னன் அவர்களை மாற்ற நினைத்தான். மக்கள் நாள்தோறும் செல்லும் வழியில் பெரிய பாறாங்கல்லைப் போட்டு வைத்தான். அதற்கு அடியில் புதையலை ஒளித்து வைத்தான். புதையலைக் கண்டுபிடிப்பவருக்கு அது சொந்தம் என அறிவித்தான். ஒரு நாள் .............

(அல்லது)

ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்கு குறையாமல் கவிதை ஒன்று எழுதுக:

'உழைப்பு' அல்லது 'கார்மேகம்'

## பகுதி - 5

37. **கீழ்க்காணும் பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் ஏதேனும் ஐந்தினை எடுத்து எழுதுக:** 1×5=

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்த பாயுது காதினிலே - எங்கள்

தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே!
காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருணை நதி என -
மேவிய யாறுபல வோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு!

- *பாரதியார்*

*பகுதி - 6*

8. கயல்விழி தன்னிடம் ரூபாய் 25,000/- வைத்திருந்தாள். அதில் ரூ. 15,000/- தை தன் வங்கிக் கணக்கில் செலுத்துவதற்காக வங்கிக்கு சென்றாள். தேர்வர் தன்னை கயல்விழியாக பாவித்து உரிய படிவத்தினைப் பூர்த்தி செய்க. 1×5=5

*பகுதி - 7*

9.அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்கவும்: 3+2=5

அன்பரசு ஒவ்வொரு தேர்விலும் அறுபது மதிப்பெண்களுக்கு குறையாமல் பெறுவான். ஆனால் அவன் தந்தை அம்மதிப்பெண் போதாது என்றும், மேலும் முயற்சி செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார். அதிக மதிப்பெண் பெறுவதற்காக அவனை தனிப்படிப்புக்கும் அனுப்புகிறார். தனிப்படிப்புச் சொல்லித் தருபவரின் பழகுந்தன்மை, அவனுக்குப் பிடிக்கவில்லை. வீட்டில் சொன்னால் தனிப்படிப்புக்குச் செல்ல விருப்பமில்லாமல் இவ்வாறு கூறுகிறான் என்று நினைப்பர் என மனத்துயரம் கொள்கிறான்.

i) அன்பரசு தன் சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பான்?
ii) நீங்கள் அன்பரசனாக இருந்தால் என்ன செய்வீர்கள்?
iii) உங்களைப் போன்ற மாணவர்களுக்குத் தனிப்படிப்பு தேவையா? ஆம் அல்லது இல்லை எனில் அதற்கான காரணம் கூறுக.

ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்கவும்:

விழி மாற்றுத்திறனாளி ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடுநேரமாகக் காத்துக் கொண்டு இருக்கிறார். அந்த வழியாகப் பலரும் நடந்து செல்கின்றனர். ஆனால் அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.

i) இது போன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?
ii) பிறருக்கு உதவுவதன் மூலம் வெளிப்படும் பண்பு யாது?

பிரிவு - IV (மதிப்பெண்கள் : 20) *பகுதி - 1*

10. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்கவும்: 1×10=10

அ) எழுத்தர் வேலை வேண்டி நகராட்சி ஆணையாளருக்கு விண்ணப்பம் எழுதுக.

(அல்லது)

ஆ) நீ படித்து மகிழ்ந்த நூலைப் பற்றி உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

*பகுதி - 2* 1×10=10

11. கீழுள்ள வினாக்களுள் எவையேனும் ஒன்றினுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதி தலைப்பு ஒன்று தருக

அ) முன்னுரை - அடிப்படை போக்குவரத்து விதிகள் - சட்டத்தை மதித்தல் - சாலை விதிகளை பின்பற்றல் - விபத்துக்களை தடுத்தல் - முடிவுரை. (அல்லது)

ஆ) முன்னுரை - நீரின்றி இயங்காது உலகம் - மழைநீரைச் சேமித்தல் - மழைநீரின் பயன்கள் - மழைநீரைச் சேமிக்கும் வழிமுறைகள் - முடிவுரை.

-------------